Reg No : SRG/ Coimbatore / 98 /2022

ENGINEERS CLUB TAMILNADU- ECT

UNIQUE BECOMES UNITY

Er.T.M.SELVATHURAI
State President / Organizer
JAYAMATHI CONSTRUCTION
Pollachi
Mob: 98422-93233 | 70101 11464

Er.K.RAMESH KUMAR
State Secretary
JANANI BUILDERS & WATER PROOFS CO.,
Madurai Coimbatore Kodaikanal
Mob : 96269 77699

Er.K.P.ANANTHAN,
State Treasurer
ALLWIN GROUP
Pollachi
Mob : 9080780090 | 96596-190

சுற்றறிக்கை.1/2022
நாள்: 26-07-2022

அன்பார்ந்த பொறியாளர் நண்பர்களுக்கு வணக்கம்!...,

மாநிலம் தழுவிய பொறியாளர் சங்கத்தில், பொறியாளர்கள் நேரடியாக உறுப்பினராக சேர்வதை முதன்மை நோக்கமாக கொண்டு நமது சங்கம் சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டு வாட்ஸ் ஆப் குழுவாக இயங்கி வருகிறது.. கடந்த 11-04-2022 அன்று முறையாக அரசால் SRG/Coimbatore/98/2022 என்ற பதிவு எண்ணால் "ENGINEERS CLUB TAMIL NADU" என்ற பெயரால் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் நமது சங்கத்திற்கென தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி-பொள்ளாச்சி கிளை யில் ஓர் நடப்பு கணக்கு தொடங்கப்பட்டுள்ளது. அதன் விவரம்.

வங்கிக்கணக்கின் பெயர் : ENGINEERS CLUB TAMIL NADU

வங்கிக் நடப்பு கணக்கு எண்: 090150050801016

IFSC CODE: TMBL0000090

மேலும் நமது சங்க உறுப்பினர்களுக்கு நுழைவுக்கட்டணம் ரூ.1000 , ஆண்டு சந்தா ரூ.1000 என மொத்தம் ரூ.2000/- [ரூபாய். இரண்டாயிரம்/-] என வசூலிக்க முடிவு செய்துள்ளோம். சந்தா கட்டிய உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை(ID CARD), உறுப்பினர் அட்டை(MEMBER SHIP SHEILD), இருசக்கர வாகனம்,மகிழுந்து, அலுவலகங்களில் ஒட்டுவதற்கான சங்க முத்திரை(LOGO)- உடன் கூடிய அடையாள அட்டை போன்றவைகள் வழங்க உள்ளோம். ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் உறுப்பினர் உரிமம் புதுப்பித்தல் கட்டணம் ரூ.1000 [ரூபாய். ஆயிரம்] செலுத்த வேண்டும்.

<u>உறுப்பினர் பதிவு செய்யும் முறை:</u>

முறையான உறுப்பினர்களாக பதிவு செய்ய விரும்பும் பொறியாளர்கள் உடனடியாக நமது சங்க அதிகாரப்பூர்வ வலைதள பக்கமான <u>www.engineersclubtamilnadu.com</u> -ல் சென்று, அதில் கேட்கும் தகவல்களை உள்ளிட்டு, தங்களது கடவுச்சீட்டு(PASSPORT SIZE) அளவு புகைபடம் மற்றும் கட்டிடப் பொறியியல் சம்மந்தமாக தாங்கள் பயின்ற கல்விச்சான்றிதழ்களில்

130/1-1 ST LAY OUT, KUMARAN NAGAR, POLLACHI - 642001
Mail : engineersclubtamilnadu@gmail.com

Scanned with CamScanner

ஏதவாது ஒன்றை உள்ளீடு செய்து, ECT பதிவு எண் பெற வேண்டும். ஏற்கனவே ECT பதிவு எண் பெற்றவர்கள் மீண்டும் பதியத் தேவைஇல்லை. அதன்பிறகு மேற்கண்ட வங்கிக்கணக்கிற்கு **ரூ.2000** செலுத்தி அதற்கான ஆவணங்களை நமது சங்க மாநில **பொருளாளர்.ஆல்வின் ஆனந்தன்** அவர்களுக்கு **96596-19000** என்ற வாட்ஸ்ஆப் எண்ணில் தெரியப்படுத்தவும். சந்தா கட்டிய உறுப்பினர்களுக்கு **30 நாட்களுக்குள்** மாநில சங்கம் வழங்கும் அனைத்து சான்றிதழ்களும் தபாலில் வந்து சேரும்.

மேலும், ஒவ்வொரு ஊரிலும் நமது இஞ்சினியர்ஸ் கிளப் தமிழ்நாடுக்கான **மையம்(CENTRE)** அமைக்க உள்ளோம். ஒவ்வொரு ஊரிலும் சுமார் **15 பொறியாளர்கள்** நமது சங்கத்தில் இணைந்த உடன் அந்த ஊரில் மையம் அமைத்து தர உள்ளோம். தங்களது ஊரில் மையம் அமைக்க வேண்டும் என ஆர்வமாக உள்ள பொறியாளர்கள் முதலில் நமது சங்கத்தில் முறையாக சந்தா கட்டி முழுமையான உறுபினராக சேர வேண்டும். சேர்ந்த பின் நமது சங்க மாநில செயலாளர் பொறி. K.**ரமேஷ்குமார்-96269-77699** அவர்களை தொடர்பு கொள்ளவும்.

விரைவில் நமது சங்கத்தின் **முதல் செயற்குழு கூட்டம்** நடைபெற உள்ளது. ஆகவே நமது சங்கத்தின் நிர்வாக குழுவில் உள்ள அனைவரும் தவறாமல் சந்தா செலுத்தி முழுமையான உறுப்பினராக இணையவும். அக்கூட்டத்தில் அவர்களுக்கு **உறுப்பினர் அட்டை** மற்றும் **இதர ஆவணங்கள்** வழங்க உள்ளோம் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்று போல் என்றும் உங்களின் முழு ஆதரவை விரும்பும்....

உங்களில் ஒருவன்!!!!!!!!!

ENGINEERS CLUB TAMIL NADU
130/1, Kumaran Nagar Ist Layout,
Pollachi, Coimbatore,
Tamil Nadu - 642 001.

த. ம. செல்வத்துரை
26/07/2022

பொறி.த.ம.செல்வத்துரை

[ஒருங்கிணைப்பாளர்/தலைவர்-ECT]

Scanned with CamScanner